

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (13.6.2025) முகாம் அலுவலகத்தில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணை பொதுச் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.6.2025) சென்னை, கொளத்தூர் சட்டமன்ற தொகுதி. மண்டலம்– 6, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் பேருந்து நிலையப் பணிகளை துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார். மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார். சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் பாலமுருகன், மண்டல அலுவலர் ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, செந்தில்நாதன், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, திரு.மகேஷ்குமார். மாமன்ற உறுப்பினர் திரு.நாகராஜன், திருமதி.அமுதா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கொளத்தூர் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ்

# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் பல்வேறு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு!

சென்னை,ஜுன்.14-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (13.6.2025) கொளத்தூர் தொகுதியில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும தலைவருமான பி.கே. சேகர்பாபு களஆய்வு மேற்கொண்டார்.

அந்த வகையில் கொளத்தூர், வி.க.நகர் பேருந்து நிலையம், அகரம், ஜெகநாதன் தெருவில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு மையம், பெரியார் நகர் பேருந்து நிலையம், பேப்பர் மில்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் புதிய நவீன சந்தை மற்றும் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார் பதிவாளர் அலுவலகம், பகிர்ந்த பணியிட மையம் எனப்படும் மக்கள் சேவை மையத்தை (Citizen Service Centre) ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

40-50 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட பேருந்து நிலையங்களில், பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டமிடல் தமிழக முதல்வர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. முதற்கட்டமாக தண்டையார் பேட்டை பேருந்து நிலையம், வி.க.நகர் பேருந்து நிலையம், அம்பத்தூர், பெரியார் நகர், முல்லை நகர், கவியரசு கண்ணதாசன் நகர் உள்ளிட்ட 13 பேருந்து நிலையங்களில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தி ன் சார்பில் மேம்பாட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி அமைந்த பிறகு, மகாபலிபுரம், செங்கல்பட்டு, ஆவடி, டி.நகர் ஆகிய இடங்களில் புதிய பேருந்து நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன.

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கொளத்தூர் தொகுதியில் உள்ள பெரியார் நகர் மற்றும் வி.க.நகர் பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் ஜுலை மாதம் 2025க்குள் முடிந்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமி டப்பட்டுள்ளது.

இன்றைய தினம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை மேயர் திருமதி ஆர்.பிரியா ராஜன், சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சி.இ.ஓ. திரு சிவஞானம், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், இ.ஆ.ப. மற்றும் துறைசார்ந்த அதிகாரிகளுடன் பேருந்து நிலையங்களை ஆய்வு செய்தனர். மேலும், ஏழை எளிய மக்களுக்கு இலவச டயாலிசிஸ் சென்டர்கள், துறைமுகம் மற்றும் கொளத்தூர் பகுதிகளில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளையும் விரைவாக முடிக்க அதிகாரிகள் ஆலோசனைகள் வழங்கியுள்ளனர்.

சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில், பழைய காலத்தில் (பக்தவச்சலம், காமராஜ் ஆகிய தலைவர்களின் ஆட்சிக் காலத்தில்) கட்டப்பட்ட பள்ளிகள், சந்தைகள், உடற்பயிற்சி கூடங்கள் போன்ற அமைப்புகளும் மறுகட்டமைப்பில் கொண்டு வரப்பட்டு வருகின்றன. இத்தகைய 80 மேம்பாட்டு திட்டங்களும் டிசம்பர் 2025 அல்லது ஜனவரி 2026க்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**வடசென்னை வளர்ச்சி திட்டம்:**

வடசென்னை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உருவான வளர்ச்சி திட்டம் முன்னேற்றம் அடைந்து வருகிறது. இந்த திட்டத்திற்கான அனைத்து பணிகளும் நிறைவடைந்தபின், வடசென்னை மக்களுக்கு முழுமையான சேவைகள் கிடைக்கும் என நம்பிக்கை இருக்கிறது.

குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் ஆகஸ்ட் மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, , தொடர்ந்து ஆலோசனை கூட்டங்களை நடத்தி பணிகளை விரைவுபடுத்தி வருகிறார். இது அரசியல் குற்றச்சாட்டு எனக் கருதக் கூடாது. ஆரம்பகட்ட கட்டமைப்பில் பயணிகளின் தேவைகள் பரிசீலிக்கப்படாமல் உருவாக்கப்பட்டதால், சில தொழில்நுட்பப் பிழைகள் மற்றும் துறை ஒருங்கிணைப்பு தேவைப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது. பேருந்து நிலையம் திறந்த பிறகு ஏற்படக்கூடிய போக்குவரத்து நெரிசல், மழைக்காலங்களில் தண்ணீர் தேக்கம், அடிப்படை வசதிகள் ஆகியவற்றை கணக்கிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதல்வர் தொடர்ந்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி பணிகளை விரைவுபடுத்த உத்தரவிட்டு வருகிறார்.

சென்னை பெருநகர வளர்ச்சி குழும சார்பில் 13 பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மகாபலிபுரம், செங்கல்பட்டு, ஆவடி மற்றும் தி.நகர் உள்ளிட்ட பகுதிகளில் மேம்படுத்தப்பட்டு வரும் பேருந்து நிலையங்கள் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் முத்திரைகளாக உருவாக்கப்பட்டு வருகிறது. வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் நிறைவேறும் பொழுது வட சென்னை மக்களின் தேவைகள் ஓரளவுக்கு பூர்த்தி ஆகி இருக்கும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் , வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா,, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும முதன்மைச் செயல் அலுவலர் அ.சிவஞானம், , மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே.பிரவீன் குமார், , மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், ஏ.எஸ்.முருகன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐசிஎப்.முரளிதரன், சந்துரு, மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், தாவூத்பீ, திருமதி. அமுதா, திருமதி.யோகபிரியா மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### 'தஞ்சாவூர் - கும்பகோணம் - விழுப்புரம் வழியில் இரட்டைத்தடம் அமைக்கும் திட்டம்!

# ஒன்றிய இரயில்வே அமைச்சரவை ஒப்புதல்!

## எம்.எம்.அப்துல்லா எம்.பி. கோரிக்கைக்கு பதில்!

புதுக்கோட்டை, ஜுன் 14-

தஞ்சாவூர், கும்பகோணம், விழுப்புரம் ஆகியவற்றை இணைக்கும் 193 கி.மீ. நீளமான இரயில்வே பாதையில் இரட்டைத்தடம் அமைக்கும் பணியை உடனடியாக செயல்படுத்த வேண்டும் எனக்கோரி நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் பல்வேறு முறை பேசி வந்தார்.



மேலும் இது குறித்து தொடர்ச்சியாக இந்திய ஒன்றிய இரயல்வே அமைச்சர் அவர்களுக்கு கடிதங்கள் எழுதியும் வந்தார். இதன் தொடர்ச்சியாக கடந்த 27.11.2024 அன்று இரயில்வே வாரியத் தலைவர் சதீஷ்குமார் அவர்களையும் நேரில் சந்தித்து கடிதம் மூலம் கோரிக்கை வைத்தார்.

இது குறித்து தற்போது பதிலளித்துள்ள ஒன்றிய இரயில்வே அமைச்சகம்

“விழுப்புரம் - கும்பகோணம் - தஞ்சாவூர் (193 கி.மீ.) பாதையில் இரட்டைத்தடம் அமைக்கும் பணிக்கான கள ஆய்வு நிறைவடைந்துள்ளது” எனவும், “ஆய்வு அறிக்கையைத் தயார் செய்யும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது,” எனவும் தெரிவித்துள்ளது.

இந்த இரட்டை இரயில்வே தடத்திற்கான திட்டம் 1877 ஆம் ஆண்டிலேயே உருவாக்கப்பட்டது. தற்போது வரை ஒற்றைத்தடம் மட்டுமே உள்ளதால், வழித்தட நெரிசல், இரயில்கள் தாமதம், புதிய நீண்டதூர இரயில்களுக்கு இடமில்லாமை போன்ற பல பிரச்சினைகள் நிலவு கின்றன. 2019இல் ஆய்வு ஒப்புதல் கிடைத்தும், 5 ஆண்டுகளாக முன்னேற்றம் ஏதும் இல்லை. இந்நிலையில் தற்போது வந்துள்ள இந்த அறிவிப்பின் மூலம் இந்த வழித்தடத்தில் இரண்டு ரயில்கள் ஒரே நேரத்தில் எதிர் திசைகளில் இயக்கப்பட வசதியாகும். இதனால் பயணிகள் நலன் உயர்ந்து, பொருளாதார வளர்ச்சிக்கும் வாய்ப்பு அதிகரிக்கும்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் விளைவாக, இந்தத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தும் கட்டத்துக்கு வந்துள்ளது.

### இ. கருணாநிதி எம்.எல்.ஏ.- தொகுதிப் பார்வையாளர் ரபி அகமது ஆலோசனை!

# பல்லாவரம் வடக்குப் பகுதியில் பாக முகவர்கள் ( பி. எல். ஏ.-2). ஆலோசனை- ஆய்வுக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை அறிக்கை!

பல்லாவரம், ஜுன் 14

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்லாவரம் வடக்கு பகுதியில் பாக முகவர்கள் ஆலோசனைக் மற்றும் ஆய்வுக்கூட்டம் கூட்டம் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு இணங்க மாவட்டக் கழகச் செயலாளர் மாண்புமிகு அமைச்சர் தா.மோ அன்பரசன் அவர்களின் வழிகாட்டலின் படி இன்று (14-6-2025 சனிக்கிழமை) மற்றும் நாளை (15-6-2025 ஞாயிற்றுக் கிழமை) அன்றும் பாத முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் வட்டங்கள் வாரியாக ஒவ்வொரு பாகத்திலும் அந்த பாகத்தில் உள்ள பகுதிகளிலே நேரடியாக கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அந்தக் கூட்டங்களில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ.கருணாநிதி, பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரஃபி அஹமத் வருகை தந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள ஓர் அணியில் தமிழ்நாடு புதிய உறுப்பினர் சேர்த்தல் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு பாகத்திலும் கழகத் தோழர்கள் எவ்வாறு பணியாற்றுவது என்பது குறித்து சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

எனவே அட்டவணையில் அறிவித்த உள்ளபடி 14- 6-2025 சனிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் 9வது வார்டு 113 ஆவது பாகத்தில் பாக முகவர் ஆர். பத்மநாபன் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் தே.இளங்கோவன் ஒருங்கிணைப்பாளர் ச. சிவக்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் மாலை 5.00 மணிக்கு 13 வது வார்டு 116 வது பாகத்தில் பாக முகவர் எம்.ஜி. பதி தலைமையில் வட்டக் கழக செயலாளர் பி. பரமசிவம் ஓரங்களைப்பாளர் என். ஜி கருணாமூர்த்தி ஆகியோர் ஏற்பாட்டில் மாலை 6 மணிக்கு 14வது வார்டு 152 ஆவது பாகத்தில் பாக முகவர் டி. டேரன்ட்ஸ் தலைமையில் வட்டக்கழக செயலாளர் பி. ராஜ்குமார் ஒருங்கிணைப்பாளர் எஸ். நெடுஞ்செழியன் ஏற்பாட்டில் 15-6 -2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி அளவில் 14வது வார்டு 151 வது பாகத்தில் பாக முகவர் கே. தனசேகர் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் பி. ராஜ்குமார் ஒருங்கிணைப்பாளர் எஸ். நெடுஞ்செழியன் 10.00 மணிக்கு 15வது வார்டு 142 ஆவது பாகத்தில் பாக முகவர் எஸ். அம்பேத்குமார் தலைமையில் வட்ட கழக செயலாளர் டி. வி. ராஜா ஒருங்கிணைப்பாளர் வ. முத்து ஏற்பாட்டில் 11.00 மணிக்கு 16வது வார்டு 128 வது பாகத்தில் பாக முகவர் என். தீபக் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் மை. அந்தோணி ஒருங்கிணைப்பாளர் ஐ. கஜேந்திரன் ஏற்பாட்டில் மாலை 4.00 மணிக்கு 17 வது வார்டு 271 வது பாகத்தில் பாக முகவர் கோ. ஜானகிராமன் தலைமையில் வட்டக்கழகச் செயலாளர் டி. எச். பிரான்சிஸ் பால் ஒருங்கிணைப்பாளர் கோ ஜானகிராமன் ஏற்பாட்டில் மாலை 5.00 மணிக்கு18-வது வார்டு 298 வது பாகத்தில் பாக முகவர் பி. தாமோதரன் தலைமையில் வட்ட கழகச் செயலாளர் கோ. ரங்கநாதன் எம். இளங்கோ ஏற்பாட்டில் மாலை 6:00 மணிக்கு 17வது வார்டு 137 வது பாகத்தில் பாக முகவர் பி. சரவணன் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் டி. எஸ். பிரான்சிஸ் பால் ஒருங்கிணைப்பாளர் ஐ. கஜேந்திரன் ஏற்பாட்டில் இந்த அட்டவணைப்படி கூட்டங்கள் நடைபெற உள்ளன எனவே வட்டக் கழக செயலாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் இந்தக் கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திட வேண்டும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு பாகத்தில் அமைக்கப்பட்ட கழகத்தின் சார்பில் 10 பேர் இளைஞர் அணி 10 பேர் மகளிர் அணி 10 பேர் தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த ஒருவர் நூறு வாக்காளுக்கு ஒருவர் என தேர்வு செய்யப்பட்டவர்கள் அந்த பாகத்தில் உள்ள கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் துண்டு பிரசுரம் மூலமாக தகவல் தந்து அவர்கள் அனைவரும் அழைத்து கூட்டங்களில் 100 பேருக்கு குறையாமல் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்து நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை வேண்டுகோள் விடுத்து அறிக்கை தந்துள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம் குண்ணவாக்கத்தில் காஞ்சிபுரம் செல்லும் புதிய வழித்தடப் பேருந்தை மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர். க. செல்வம், ஆர். கே. தேவேந்திரன், பி சேகர், என் பாண்டியன், டி. சஞ்சய் காந்தி, திருமதி. புவனேஸ்வரி குப்புசாமி, உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

